O.S.No.91/ 2023 தேதி – 23.01.2025

வா.சா.1. – கவிதா

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

இறக்கும் போது என் கணவருக்கு வயது 50 இருக்கும். என் கணவருடன் இறந்த நபரின் வீட்டிற்கும், எங்கள் வீட்டிற்கும் இடையே கால் மயில் துாரம் இருக்கும். எங்கள் ஊர் பெயர் முதலிபட்டி, என் கணவருடன் இறந்த நபரின் ஊர் ஒரே ஊரா வேறு ஊரா என்றால் அவருடைய ஊர் சதானந்தபுரம். என் கணவர் தோட்டத்திற்கு சென்று தினமும் குளிக்கிற வழக்கம் உண்டா என்றால் உண்டு. அதேபோல் சதானந்தபுரத்தில் உள்ள நிறைய பேர் அந்த தோட்டத்தில் குளிக்கச்செல்வார்கள் என்றால் சரிதான். என் கணவர் இறந்த தேதியான 20.10.2022 அந்த மாதம் நன்றாக மழை பெய்யக்கூடிய காலம் என்றால் சரிதான். என் கணவர் இறந்த அன்று இரவு முழுவதும் நல்ல மழை, காலையில் மழை இல்லை. என் கணவர் இறந்த செய்தியை எனக்கு யார் சொன்னது என்றால் சிறுவர்கள் சொன்னார்கள். என் கணவர் இறந்த செய்தி கேள்விபட்ட கால் மணி நேரத்தில் அங்கு சென்றுவிட்டேன். நான் போகும் போது அங்கு மோகன்ராஜ் கம்பியை சுற்றிக்கொண்டிருந்தார், எங்களை பார்த்தவுடன் மோகன்ராஜ் ஓடிவிட்டார். நான் போனவுடன் எவ்வளவு நேரத்தில் சீனிவாசனின் மனைவி, மற்றும் சொந்தக்காரர்கள் வந்தார்கள் என்றால் நான் அந்த இடத்திற்கு செல்லும்போது என் கணவருடன் இறந்த சீனிவாசனை துாக்கிக் கொண்டு சென்றார்கள். நான் போகும் போது என் கணவர் கிணற்றுக்கு பக்கத்தில் தொளி அடித்து வைத்திருந்த வயக்காட்டிற்கு பக்கத்தில கிடந்தார். அந்த வயக்காட்டில் ஈரமாக தண்ணீர் இருந்தது. நான் அந்த இடத்தில் இருக்கும் போது மின்சார வாரியத்திலிருந்து ஆட்கள் வரவில்லை. என் கணவர் இறந்துகிடந்த இடத்திற்கு அருகில் ஒரு போஸ்ட் கம்பம் இருந்ததா என்றால் இருந்தது. அந்த போஸ்ட் கம்பத்தில் இரும்பு பாக்ஸ் இருந்ததா என்று நான் கவனிக்கவில்லை. தினசரி என்கணவர் பிரதிவாதியின் காட்டை கடந்து தான் குளிக்க போவார். என் கணவர் இறந்த பொழுது எங்கள் ஊரில் மின்சாரத்தை நிறுத்தினார்களா என்ற செய்தி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் கணவர் தொளி அடித்திருந்த வெட்ட வெளியான தண்ணீர் கிடந்த வயலில் கிடந்தார்

என்றால் சரிதான். எனது மூத்த மகள் சுபாக்கு 26 வயதும், உஷாவுக்கு 24 வயதும் ஆகிறது. என் கணவர் தினசரி தோட்டத்திற்கு குளிக்கச் செல்வார் என்றால் சரிதான். அந்த தோட்டத்தில் உள்ள அனைத்து விவரங்களும் என் கணவருக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. எத்தனை வருடங்களாக என் கணவர் அந்த தோட்டத்திற்கு குளிக்கச் சென்று வந்தார் என்றால் 7,8 வருடங்களாக சென்று வருவார். அந்த தோட்டத்தில் முன்பக்கம் என்னென்ன மரங்கள் இருக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியாது. என் கணவர் இறப்பு சம்மந்தமாக மின்சார வாரியத்தை சேர்ந்தவர்கள் எங்களிடம் எதுவும் விசாரிக்கவில்லை, நானும் சென்று எதுவும் கேட்கவில்லை. என்கணவர் தயாளா ஆபிஸில் லோடு மேனாக வேலை செய்தார். என் கணவருக்கு தினசரி சுமார் ரூபாய் 800, 900 சம்பளம் கிடைக்கும். மேற்படி கம்பெனியிலிருந்து என் கணவர் இறந்ததற்கு இன்சூரன்ஸ் பணம் எதுவும் கிடைக்கவில்லை. என் கணவருடன் இறந்த சீனிவாசனின் குடும்பத்தாரை நான் சென்று பார்த்து எதுவும் விசாரிக்கவில்லை. நான் விவசாய வேலைக்கு செல்வதில்லை, தீப்பெட்டி ஆபிஸ் வேலைக்கு சென்றேன், தற்போது எந்த வேலைக்கும் செல்லவில்லை. நான் அந்த தோட்டத்திற்கு துணி துவைக்க செல்வேனா என்றால் போகவில்லை. லீவு நாட்களில் என் கணவர் அந்த தோட்டத்தில் வேலைக்கு செல்வாரா என்றால் இல்லை, கொத்தனார் வேலைக்கு செல்வார். என்கணவர் லீவு நாட்களில் சம்பளத்திற்கு அந்த தோட்டத்தில் வேலைக்கு செல்வார் என்றும், நான் தினசரி அந்த தோட்டத்திற்கு துணி துவைக்க செல்வேன் என்றும், எனக்கும், என் கணவருக்கும் அந்த தோட்டத்தில் உள்ள அனைத்து விவரங்களும் தெரியும் என்றும், தற்போது வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் அந்த தோட்டத்தில் ஒரு பகுதியை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்தார் என்றால் சம்பவத்திற்கு 4,5 வருடத்திற்கு முன்னர் செய்தார். எத்தனை வருடங்களாக செய்தார் என்றால் 1 வருடமாக செய்தார். அந்த குத்தகை காலத்தில் என் கணவருக்கு துணையாக அந்த தோட்டத்திற்கு வேலைக்கு செல்வேன் என்றால் நான் செல்வதில்லை. நான் அங்கு வேலைக்கு சென்றிருக்கிறேன் என்றும், நான் தற்போது வழக்கிற்காக போகவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் அந்த நெல் வயலுக்குரிய

மகசூலைக்கூட அந்த உரிமையாளருக்கு கொடுக்கவில்லை என்றால் 8 மூடை நெல் கொடுத்தது எனக்கு தெரியும், வீட்டில் இருந்து தான் கொண்டு சென்றார். எஎன் கணவர் அந்த தோட்டத்திலிருந்து காய்கறிகள், பழங்கள் வீட்டிற்கு கொண்டு வருவது வழக்கம் என்றால் சரியல்ல, அவ்வாறு கொண்டு வரமாட்டார். தோட்டத்தின் உரிமையாளருக்கு என் கணவர் தான் உதவியாக இருந்தார் என்றால் சரியல்ல. தோட்டத்தின் உரிமையாளருக்கு என் கணவர் தான் உதவியாக இருந்தார் என்றும், அதனால் தான் ஒரு பகுதியை குத்தகைக்கு எங்களுக்கு கொடுத்தார் என்றும், அதனால் தான் விவசாயம் செய்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. ஜீ1 கம்பி என்றால் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஒரு பொடி கம்பி என் கணவரின் கையில் கிடந்தது. சீனிவாசன் மீது ஏதாவது கம்பி கிடந்ததா என்று எனக்கு தெரியுமா என்றால் நான் விசாரித்து தெரிந்துக் கொள்ளவில்லை. என் கணவர் தொளி அடித்து கிடந்த வெட்ட வெளி வயலில் தான் இறந்துகிடந்தார் என்றும், அந்த இடத்தில் எந்தவித கம்பி வேலியும் இல்லை என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.